**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 138** **நாள்: 17.10.2016**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் எடுக்கப்பட்டு வரும் தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கைகள், குடிநீர் விநியோகம் மற்றும் வடகிழக்கு பருவமழை குறித்து எடுக்கப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் ஆய்வு.**

*******

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் எடுக்கப்பட்டு வரும் தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கைகள், குடிநீர் விநியோகம் மற்றும் வடகிழக்கு பருவமழை குறித்து எடுக்கப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து இன்று (17.10.2016) தலைமைச் செயலகத்தில் உள்ள பழைய கூட்டரங்கத்தில் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாகம், பேரூராட்சிகள் துறை, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஊரக வளர்ச்சி துறை ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரக பகுதிகளில் தொற்று நோய்கள் ஏற்படாமல் தடுக்க எடுக்கப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டு அலுவலர்களுக்கு பின்வருமாறு அறிவுரை வழங்கினார்:-

- ❖ வீடுகள் மற்றும் பொது இடங்களில் கொசுக்கள் உற்பத்தியாவதற்கு காரணமான டயர், கொட்டாங்கச்சி மற்றும் திறந்த நிலை தொட்டிகளில் தண்ணீர் தேங்காத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

- ❖ தற்பொழுதுள்ள குடிநீர் ஆதாரம் பயன்படுத்த இயலாத நிலையில் இருப்பின், மாற்று ஏற்பாடாக தூய்மையான இடத்தில் இருந்து தண்ணீர் எடுத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும். நிலைமை சீராகும் வரை லாரி மூலம் வழங்கப்பட வேண்டும்.
- ❖ மழைநீர் வடிகால்களை தினமும் சுத்தப்படுத்தியும் மற்றும் கழிவுநீர் வடிகாலில் கழிவுநீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் கொசு ஒழிப்பு மருந்தை சரியான கால இடைவெளியில் தெளிக்க வேண்டும்.
- ❖ அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் காலை **6** மணிக்கு அலுவலர்கள் நேரில் சென்று துப்புரவுப் பணிகளையும் குடிநீர் வழங்கல் பணிகளையும் ஆய்வு செய்ய வேண்டும்.
- ❖ தொற்று நோய்களைப் பரப்பும் ஏ.டி.எஸ். கொசுக்களை முழுமையாக ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ❖ தண்ணீர் தேங்கி நிற்கும் பகுதிகளிலும், குடியிருப்புப் பகுதிகளில் உள்ள வீடுகளின் உள்ளேயும், வெளியேயும் புகை அடித்தல் மற்றும் மருந்து தெளித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும்.
- ❖ அனைத்துப் பகுதிகளிலும் உள்ள காலிமனைகளில் உள்ள குப்பை கூளங்களை, தனியார் இடம் என்றும் பாராமல் அவற்றை உடனடியாக அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- ❖ கொசுமுட்டை மற்றும் புழுக்களை ஒழித்திட தேவையான அளவு மருந்தினை இருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும்
- ❖ புகை அடிக்கும் இயந்திரங்கள் போதுமான அளவில் உள்ளதை உறுதி செய்ய வேண்டும். தேவைப்படின் உடனடியாக புதிய இயந்திரங்களை கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

❖ மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் ஆகியோரை தொற்று நோய் ஒழிப்புப் பணியில் முழுமையாக ஈடுபடுத்தி பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

❖ கைபிரதிகள் வழங்குதல், ஊர்வலம், தகவல் கல்வி மற்றும் தொடர்பு ஆகிய முறைகளை பயன்படுத்தி விழிப்புணர்வு பிரச்சாரங்கள் செய்து டெங்கு காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவுவதை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

❖ தொற்று நோய் பாதிப்புகள் அறியப்பட்டுள்ள இடங்களில் சிறப்பு குழுக்கள் அமைத்து சுகாதாரத் துறை அலுவலர்களுடன் இணைந்து தடுப்பு நடவடிக்கைகள் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் குறித்து, சென்னை பெருநகர குடிநீர் வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகராட்சி நிர்வாகம், பேரூராட்சிகள் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையினரிடம் விரிவான ஆய்வு மேற்கொண்டு பின்வருமாறு அறிவுரைகள் வழங்கினார்.

❖ குடிநீர் விநியோகத்தை களப்பணியாளர்கள் அன்றாடம் ஆய்வு செய்து நல்ல முறையில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்தல் வேண்டும்.

❖ தேவைக்கேற்ப குளோரின் கலந்த சுகாதாரமான குடிநீரை அன்றாடம் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

❖ லாரிகள் மூலம் குடிநீர் வழங்கும் பொழுது, லாரியின் தகுதிச் சான்று, ஓட்டுநர் உரிமம், ஓட்டுநரின் முன் அனுபவம் ஆகியவற்றை தீர ஆய்வு செய்து லாரிகளை பாதுகாப்புடன் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

❖ குடிநீர் லாரிகள் சாலை விதிகளை மீறியோ அதிவேகமாக இயக்கினால் உடனடியாக தகவல் தெரிவிக்கும் வகையில் லாரிகள் பின்புறம் தொலைபேசி எண்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

❖ விபத்துகள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு, குடிநீர் வழங்கும் லாரிகளில் வேகக் கட்டுப்பாட்டு கருவிகள் பொருத்தப்பட்டுள்ளதை உறுதி செய்தும், அனைத்து லாரிகளும் 30– 40 கிலோ மீட்டர் வேகத்தில் மட்டுமே இயக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

❖ திறந்த நிலை கிணறுகள் போன்ற நீராதாரங்களில் குளோரின் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குடிநீர் தேக்க தொட்டிகள் மற்றும் மேல்நிலை தொட்டிகளை சுத்தமாகப் பராமரிக்க வேண்டும்.

மேலும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் வடகிழக்கு பருவமழை ஓரிரு நாட்களில் எதிர் நோக்கப்படுவதால், நகர்ப்புறம் மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் கால்வாயில் மழைநீர் தங்குதடையின்றி செல்லும் வகையில், தூர் வாரியும் மற்றும் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

இவ்வாய்வுக் கூட்டத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி இஆப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய முதன்மை செயலர்/ மேலாண்மை இயக்குநர் (பொ) திரு.விக்ரம் கபூர், இஆப., பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.தீரஜ்குமார், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி இயக்குநர் திரு.கா.பாஸ்கரன், இஆப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.க.மகரபூஷணம் இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மை தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை குடிநீர் வாரிய பொறியியல் இயக்குநர்கள், நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், ஊரக வளர்ச்சி இயக்குநரக கூடுதல் இயக்குநர்கள், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள், நகராட்சி ஆணையாளர்கள், தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள், செயற் பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**